بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

November 15 2013

**தமிழாக்கம் : மவ்லவி N. ஸியாவுல் ஹக் சாஹிப்**

# கிழக்கத்திய நாடுகளின் வெற்றிப் பயணமும் இறை அருள்களும்

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

நான் கடந்த சில வாரங்கள் சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளின் சுற்றுப் பயணத்தில் இருந்தேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். பொதுவாக, சுற்றுப்பயணத்தின் போது பொழியும் அல்லாஹ்வின் அருளின் மழையைக் குறித்து எடுத்துக் கூறுவது எனது வழக்கமாகும். இந்த வகையில் இன்று சுருக்கமாக நான் அதனைப் பற்றி எடுத்துரைப்பேன்.

அல்லாஹ்வின் அருள்களை எண்ணுவதும் அதன் உச்சத்தை அறிவதும் சாத்தியமற்றதாகும். நாம் அருளின் எல்லையை அடையக் கூடியவர்களாக இருக்கின்றோம் என நினைக்கும்போது அல்லாஹ் உடனே இந்த தவறான எண்ணத்தை அகற்றி விடுகின்றான். மேலும் எவற்றை நீங்கள் எண்ணற்ற அருள்களாக கருதுகின்றீர்களோ அது அருளின் ஆரம்பம் ஆகும். நான் தற்போது உங்களை மேலும் ஓர் அடி முன்னேறச் செய்கிறேன் எனப் புரிய வைக்கின்றான்.

எனவே அல்லாஹ்வின் அருள்களை எண்ணுவது அதன் உச்சத்தை அறிவது மனித சக்திக்கு அப்பாற்பட்டதாகும். குறிப்பாக அல்லாஹ்வின் வாக்குறுதியின் தொடர், ஒவ்வொரு திருப்பத்திலும் நமக்கு மேலும் ஒரு நற்செய்தியை வழங்கக்கூடியதாக இருக்கும் போது, அதை எண்ணுவது என்பது சாத்தியமற்றதாகும். இதைக் குறித்து அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளான். இதைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பும் செய்திருக்கின்றார்கள். அருள்களின் உச்சத்தைப் பற்றி பேசுவது என்பது வெகுதொலைவில் உள்ள விசயமாகும். எந்த அருளை எடுத்து எனது உரையைத் தொடங்குவது என எனக்குப் புரியவில்லை. எவ்வாறிருப்பினும் நான் பயணத்தில் கடந்த ஏழு வாரங்களுக்கிடையில் கண்ட அல்லாஹ்வின் அருள்களை சுருக்கமாக எடுத்துக் கூறுவேன்.

சில அறிக்கைகளை வகீலுத் தப்ஷீர் அவர்கள் அல் ஃபஸ்லுக்கு அனுப்புகின்றனர். அவர்கள் அதனை வெளியிடுகின்றனர். அவற்றை மக்களில் சிலர் படித்திருக்கலாம். ஆனால் சில விசயங்களைப் படம்பிடித்துக் காட்டுவது அல்லது எடுத்துக் கூறுவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். அந்நியர்கள் பேசும் போது வெளிப்படக்கூடிய அவர்களது முகபாவணைகளை 100% என்னாலும் எடுத்துக் கூற முடியாது. அல்லது எந்தவொரு அறிக்கையினாலும் எடுத்துக் கூற இயலாது. ஆனால் M.T.A. –வில் ஓரளவு இதனைப் பார்த்திருக்கலாம். ஒரு சில சம்பவங்களை ஒளிபரப்பு செய்திருக்கலாம். ஆங்கில அறிவு படைத்தவர்களுக்கு பிரஸ் டெஸ்க் மிகவும் சிறந்த ஏற்பாட்டைச் செய்திருந்தது. இதன் மூலம் சுற்றுப் பயணத்தின் முக்கியமான குறிப்பான சம்பவங்களைப் பற்றிய செய்தி உலகிலுள்ள அஹ்மதிகள் வரை எட்ட வைக்கப்பட்டுக் கொண்டேயிருந்தது.

எவ்வாறிருப்பினும் ஒவ்வொரு சுற்றுப் பயணமும், ஒவ்வொரு நாளும் நாம் அல்லாஹ்வின் அருளின் மூலம் நன்றி செலுத்துவதற்குரிய புதிய வழிகளைக் கண்டோம். இவ்வாறு அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைக்கு ஆதாரங்களாகத் திகழும் ஏற்பாட்டைச் செய்கின்றான். நான் இந்த முன்னுரைக்குப் பின்னர் பயணத்தின் நிலைகள் மற்றும் அல்லாஹ்வின் அருள்களைப் பற்றி எடுத்துரைக்கின்றேன்.

எங்களது சுற்றுப் பயணத்தின் முதல் இலக்கு சிங்கப்பூர் ஆகும். அங்கு, சிங்கப்பூர் அஹ்மதிகளைத் தவிர இந்தோனேஷியா, மலேசியாவின் சில பொறுப்பாளர்களான ஆண்களும் பெண்களும் வந்திருந்தனர். அவர்களிடம் ஓர் உணர்வுரீதியான நிலை ஏற்பட்டிருந்தது. அதனை நீங்கள் M.T.A. –வில் குத்பாவின் சமயத்தில் காட்டப்பட்ட ஒரு சில காட்சிகள் மூலம் கணித்திருப்பீர்கள். இந்த சிங்கப்பூர் சுற்றுப் பயணம் 10 நாட்களைக் கொண்டதாகும். இதில் இந்தோனேஷியா, மலேசியா, புருணை, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், பாப்வா, நியூகயானா மற்றும் மியான்மரிலிருந்து வந்த அஹ்மதிகள், குழுவினருடன் சந்திப்பு நிகழ்ந்தது.

இந்தோனேஷியாவிலிருந்து ஏறக்குறைய 2500 அஹ்மதிகள் வந்திருந்தனர். இவர்களில் பெரும்பாலார் வசதி படைத்தவர்கள் அல்லர். ஆனால் தூய்மையிலும் விசுவாசத்திலும் நிரம்பி காணப்பட்டனர். சிலர் கடன் வாங்கிக் கொண்டும், சிலர் சில பொருள்களை, சொத்துக்களை விற்றும் பயணத்திற்காகச் செலவழித்தனர். நான் முன்பும் இதனை ஒரு குத்பாவில் எடுத்துரைத்துள்ளேன். இவர்களுக்கு ஏதாவது கவலை இருந்தது என்றால் அது எங்களது மார்க்கத்திற்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் எப்போதும் நம்மை மார்க்கத்தில் நிலைநிற்கச் செய்வானாக! என்பதாகவே இருந்தது. இவர்களில் ஒரு வருடமாக வீடில்லாமல் தவிப்பவர்களும் உள்ளனர். அவர்களை அவர்களது வீட்டினர் வீட்டை விட்டு வெளியேற்றி விட்டனர். தற்போது ஒரு தற்காலிகமான சென்டரில் வசிக்கின்றனர். ஆனாலும் இவர்கள் தமது ஈமானை விட்டு விடவில்லை. இன்னும் அதிகமாகவே இவர்களது ஈமானில் உறுதி ஏற்பட்டுள்ளது.

இதைத் தவிர ஜமாஅத் பணிகள், சந்திப்புகள், வகுப்புகள் போன்ற நிகழ்ச்சிகள் எனக்கு இருந்தன. அந்நியர்களுடன் ஒரு நிகழ்ச்சி சிங்கப்பூரிலும் இருந்தது. இதில் இந்தோனேஷியாவிலிருந்து வந்த ஜமாஅத்தைச் சாராதவர்களும் கலந்து கொண்டனர். இதில் பேராசிரியர்கள், ஸ்காலர்கள், அரசியல்வாதிகள், கல்வியறிவி படைத்த ஒரு சிலர், இரண்டு பத்திரிகை நிரூபர்கள் ஆகியோரும் வந்திருந்தனர். இரண்டு பத்திரிகை நிரூபர்களும் பேட்டி கண்டனர். ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம், ஜமாஅத்தினருடன் அங்கு நடைபெற்ற விசயங்களைக் குறித்து என்னிடம் பேட்டி கண்டனர்.

வாழ்வின் பல்வேறு துறையுடன் தொடர்பு கொண்டிருந்த பலர் இதில் கலந்து கொண்டனர். நான் கூறியது போன்று அதில் ஜமாஅத்தைச் சாராதவர்களும் இருந்தனர். இவர்கள் 48 பேர் ஆவர். இதில் பல்கலைக் கழகப் பேராசிரியர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், மார்க்கப் பிரிவுகளில் நஹ்ஜத்துல் உலமாவின் 8 உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர். அதில் ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர் எனது அருகில் அமர்ந்திருந்தார். அவர் நான் கொடுத்த சிறிய உரைக்குப் பிறகு இந்தோனேஷியாவில் எங்களது ஒரு யுனிவர்சிட்டி உள்ளது. நீங்கள் அங்கு வந்து சொற்பொழிவு நிகழ்த்துங்கள். நாங்கள் இதற்கான ஏற்பாட்டைச் செய்கின்றோம் என்றார். அதற்கு நான் மிகவும் நல்லது. உங்களால் முடியும் என்றால் செய்யுங்கள். ஒருவேளை மக்கள் எந்த அளவு எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்பது உங்களுக்கு தெரியவில்லை என்றேன். எவ்வாறிருப்பினும் அவரிடம் நேர்மை இருந்தது. சில நல்லியல்பு உடையவர்களும் இருந்தனர். இவர் உலமாக்களின் கவுன்ஸிலின் உறுப்பினரும் ஆவார்.

சிங்கப்பூரில் நடந்த இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் அங்குள்ள ஒரு விருந்தினர் மிஸ்டர். லீன்குன் சாகிபும் வந்திருந்தார். இவர் 29 வருடங்களாக 1968 –லிருந்து சிங்கப்பூரின் தூதராக இருந்துள்ளார். உயர் கமிசனராக, பாராளுமன்ற உறுப்பினராக, மாநிலத்தின் மூத்த அமைச்சராகவும் இருந்திருக்கிறார். இவர் சிங்கப்பூரின் தோற்றுனர்களில் ஒருவராவார். இவர் கூறினார்: 1960 –ல் எகிப்தில் சிங்கப்பூரின் தூதராக இருந்த போது, எகிப்து மற்றும் ஏனைய அரபு நாடுகளின் நிலை நன்றாக இருந்தது. அமைதி நிலைபெற்றிருந்தது. ஆனால் கடந்த சில வருடங்களாக அங்கு அமைதி சீர்குலைந்து விட்டது. மேலும் இஸ்லாத்தைப் பற்றிய தவறான சிந்தனை வெளிப்படுத்தப்படுகின்றது. மேலும் அவர் எனக்கு இந்த விசயத்தைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. நான் இந்த விசயத்தைப் பாராட்டுகின்றேன். அதாவது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் உலகின் முன் உண்மையான அமைதி நிறைந்த போதனைகளை வழங்குகின்றார்கள். தூதுச் செய்தியை வெளியிடுகின்றார்கள். இது அவருக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது எனக் கூறினார். இவர் பணி ஓய்வு பெற்று விட்டார். இவர் சிங்கப்பூரில் எல்லாரும் கண்ணியமளிக்கும் ஒரு நபர் ஆவார்.

இதைப் போன்று இந்தோனேஷியா மோஸ் கவுன்ஸில் முஸ்லிமா டேலண்ட் டிபார்ட்மெண்ட் –ன் தலைவர் ஜகார்காவின் மாநில இஸ்லாமிக் யுனிவர்சிட்டியின் Women study –ன் தலைமை லெக்சரர் மிஸ்டர் இத்தா ஃபவிஸியாதா எனது உரையைக் கேட்ட பின்னர் கூறினார்: ஜமாஅத் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளின் அறிவையும், ஆற்றலையும் முன்னேற்றம் அடையாத மற்ற நாடுகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். இதன் மூலம் உலக அளவிலான நேர்மையின்மை, ஏழ்மைக்கு எதிராக போராடுவதற்கு அனைவருக்கும் முன்மாதிரியாக ஜமாஅத் திகழ வேண்டும் என்றார்.

இங்கு நான் உலகின் பொருளாதார நிலை இதனைப் பற்றிய இஸ்லாமிய போதனை என்ற தலைப்பில் உரையாற்றினேன். இந்த விசயத்தை அவர் தொடர்ந்து கூறினார்: இன்று உலகில் எவரிடமும் ஜமாஅத் அஹ்மதிய்யாவிடம் இருப்பது போன்ற அமைப்பும், தலைமையும் இல்லை. இன்று ஜமாஅத்தே அஹ்மதிய்யா மட்டும் தான் இஸ்லாத்தின் சிறந்த உதாரணம் ஆகும். இவர் அங்குள்ள இஸ்லாமிக் யுனிவர்சிட்டியின் பேராசிரியர் ஆவார்.

தாஸிக் மாலாயா Youth Movement –ஐச் சேர்ந்த ஒரு உறுப்பினர் இருந்தார். அவர் எனது உரைக்குப் பின்னர் இவ்வாறு கூறினார். இது இந்தோனேஷியாவின் அனைத்து மக்களிடமும் செல்ல வேண்டும். இதன் மூலம் அவர்கள் அமைதி மற்றும் ஒற்றுமையைக் கொண்ட இஸ்லாமிய போதனைகளைப் புரிய வேண்டும்.

அடுத்து மிஸ்டர் சூஃபி ஆனந்தோ சாஹிப் பி.எச்.டி. இவர் இந்தோனேஷியாவின் யுனிவர்சிட்டியில் புரொஃபொஸர் ஆவார். இவர் கூறினார்: எனது விருப்பம் என்னவென்றால், இந்தோனேஷியாவில் அஹ்மதிகளுக்கு எதிராக உள்ள மக்கள், கலீஃபத்துல் மஸீஹை சந்திக்க வேண்டும். அவர்களது கருத்துக்களைக் கேட்க வேண்டும். அதன் மூலம் இவர்களது உள்ளம் திறக்க வேண்டும். இன்று அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் கலீஃபா மட்டும் தான் இஸ்லாத்தை அமைதியை விரும்பக்கூடிய மார்க்கமாக எடுத்துக் காட்டுகின்றார்கள் எனக் கூறினார்.

அடுத்து இந்தோனேஷியாவின் செய்தித்தாள் டிரிபியூன் அதன் நிரூபர் ஜாஃபர் இவர் அஹ்மதிய்யத் என்ற தலைப்பில் பி.எச்.டி செய்கின்றார். இவர் கூறுகின்றார்: கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மனிதநேயம், நீதி, அமைதி நிறைந்த பொருளாதார அமைப்பைப் பற்றி எடுத்துரைத்த போதனைகள் என் மீது சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது.

ஓர் ஆங்கில இளைஞன் சிங்கப்பூரில் கடந்த 27 வருடங்களாக வசித்து வருகிறார். அங்கு அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளார். அவர் கூறுகின்றார்: நான் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக எண்ணிய போது எனது நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் அதில் நீ கலந்து கொள்ளக் கூடாது என இரண்டு மூன்று முறை தடுத்தனர். ஒருவேளை அது முஸ்லிம் நிறுவனமாக இருக்கலாம். மேலும் உம்மை வேலையிலிருந்து நீக்கி விடுவோம் எனவும் கூறினர். இருந்தபோதிலும் நான் இதில் கலந்து கொண்டேன்.

அவர் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தைக் குறித்து கூறுகிறார். நான் முன்பே ஒரு முஸ்லிம் ஆக இருந்தேன். ஆனால் இன்று கேட்ட இஸ்லாத்தின் உண்மையான சத்தியமான போதனையை வாழ்வில் முதன் முறையாக கேட்டுள்ளேன். இஸ்லாத்தின் இந்த தோற்றத்தை முதன்முறையாகக் காண்கின்றேன். நான் யூ.கே.விற்கு வருவேன் என்றார். இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தைப் பற்றிய பல விசயங்களை நான் கேட்டறிவேன் என்றார். இதன் மூலம் நான் உண்மையான இஸ்லாத்தை தெரிந்து கொள்ள வேண்டும். நான் ஜமாஅத்தில் இணையவும் விரும்புகின்றேன் என்றார். எவ்வாறிருப்பினும் அல்லாஹ் இவரது உள்ளத்தை திறப்பானாக!

பிலிப்பைன்ஸிலிருந்து ஒரு சிலர் வந்திருந்தனர். அதன் யுனிவர்சிட்டியின் ஏஸியன் மற்றும் இஸ்லாமிக் ஸ்டடியின் புரொஃபொஸர் இதனைக் கூறினார். அதாவது முதலில் அவர் தம்மை அழைத்தமைக்கு நன்றி தெரிவித்தார். அங்கு அவர் வருவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. சந்திப்பு நிகழ்ந்தது. மேலும் அவர் என்னுடன் அமர்ந்து பல விசயங்களைப் பேசினார். அதன் மூலம் அவர் இதனை கணித்துள்ளார். அதாவது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மட்டும் தான் முஸ்லிம்களை ஒன்றுசேர்க்க முடியும். இது நான் கூறிய வழிமுறைகள் மூலம் தான் நடைபெறும் என்றும் கூறினார். அதாவது அல்லாஹ் மற்றும் திருக்குர்ஆனின் உண்மையான போதனையின் பக்கம் மக்கள் திரும்ப வேண்டும் எனக் கூறினார்.

இதனைப் போன்று பிலிப்பைன்ஸின் கல்விச் செயலராக இருந்த ஒருவர் கூறுகின்றார்: இவர் முஸ்லிம் ஆவார். நான் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி இது வெற்றி பெறக்கூடியது என சாட்சி கூறுகின்றேன் என்றார். மேலும் கூறுகிறார்: எவ்வாறு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்தில் முஸ்லிம்கள் மீது அநீதியிழைக்கப்பட்டதோ அதனைப் போன்றே இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது அநீதியிழைக்கப்படுகிறது. எவ்வாறு இஸ்லாத்திற்கு முந்தைய காலத்தில் வெற்றி கிடைத்ததோ அதனைப் போன்று இன்று அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு வெற்றி கிடைக்கும். இது நிச்சயமான ஒன்றாகும். இதனை கண்களால் பார்க்கவும் செய்கின்றேன். மேலும் அஹ்மதிய்யத்திற்கு மாபெரும் வெற்றி கிடைக்கும் போது நாமும் அதில் இணைவோம் எனக் கூறினார். இவர்களுக்கு அங்குள்ள சில அமைப்புகளின் காரணமாக அச்சம் உள்ளது. உள்ளத்தால் ஏறக்குறைய இவர்கள் அஹ்மதி ஆகி விட்டனர். சிங்கப்பூரில் இந்த வரவேற்பு நிகழ்ச்சி தான் அசல் நிகழ்ச்சியாக இருந்தது. மற்றவை ஜுமுஆவாகவும், சந்திப்புகளாகவும் தான் இருந்தன.

இதன் பின்னர் ஆஸ்திரேலியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டோம். அங்கு சிட்னியில் சில நாட்கள் தங்கிய பிறகு மெல்போர்ன் சென்றோம். மெல்போர்ன், சிட்னியிலிருந்து 800, 900 மைல் தூரம் ஆகும். அங்கும் ஒரு வரவேற்பு நிகழ்ச்சி இருந்தது. இது பிரின்ஸஸ் ரிஸப்சன் சென்டரில் நிகழ்ந்தது. ஏறக்குறைய வாழ்வின் பல்வேறு துறைகளில் தொடர்பு கொண்டுள்ள 220 விருந்தினர்கள் அதில் கலந்து கொண்டனர். இதில் பாராளுமன்ற உறுப்பினரும் இருந்தனர். இராணுவத்தின் உயர் அதிகாரிகள், Army Chief –ன் பிரதிநிதி மேஜர் ஜெனரல் ரேங்க் கொண்ட நபரும் கலந்து கொண்டனர். பல்வேறு நாடுகளின் கவுன்சிலர்கள், ஃபெடரல் போலீஸ் ஆபீஸர்கள், ஏனைய உள்ளூர் கவுன்சிலர்கள், பேராசிரியர்கள் மற்றும் பல மக்கள் அங்கு வந்திருந்தனர்.

விக்டோரியாவின் மாநில பாராளுமன்ற உறுப்பினர் மிஸ். இங்காபாலிஸ் கூறினார்: உங்களது தூதுச் செய்தி எப்படிப்பட்டதென்றால் இதற்கு அனைத்து ஆஸ்திரேலியர்களும் ஆதரவு அளிக்கின்றோம். பல்வேறு சமுதாய கலாச்சார வேறுபாடுகளுக்கிடையில் ஒன்றுபட்டு ஒரு சமுதாயம் உருவாகி இருக்கின்றது. ஆஸ்திரேலியர்கள் என்ற ரீதியில் இதுபோன்ற ஓர் உயர் தூதுச் செய்தியை ஏற்க விரும்புகின்றோம். மேலும் இதுபோன்ற தூதுச் செய்திகளை எட்ட வைக்கக்கூடிய உங்களுக்கு நாங்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குகின்றோம் என்றார். இங்கும் இஸ்லாத்தின் போதனை அமைதி மற்றும் சாந்தியைக் கொண்டதாகும் என்பது தான் தலைப்பாக இருந்தது.

அடுத்து ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கூறுகிறார்: இன்று நீங்கள் கொடுத்த இந்த தூதுச் செய்தி மதங்களை விட்டும் உயர்வானதாகும். அது மனித இனத்திற்கான தூதுச் செய்தி ஆகும். நாம் அனைவரும் இந்த தூதுச் செய்தியைத்தான் பின்பற்ற வேண்டும். அமைதி, நீதி, ஒற்றுமை, மனிதயினத் தொண்டு போன்ற சிறப்புகளை இன்று ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் இமாம் எடுத்துரைத்துள்ளார்கள். இதனை நாம் செயல்படுத்த வேண்டும். இந்த தூதுச் செய்தியை அஹ்மதி பெண்கள் தொடர்ந்து பரப்பிக் கொண்டே வருகிறார்கள். மேலும் இதன்படி செயல்படவும் செய்கின்றனர். அஹ்மதி பிள்ளைகள் நல்லொழுக்கம் கொண்ட, கல்வி அறிவு படைத்த, உயர்ந்த நற்பண்புகளைப் பேணுபவர்கள் ஆவர் என்பதையும் நான் அறிவேன்.

எனவே நாம் அனைவரும் இந்த சிறப்புகளை மேற்கொள்ள வேண்டும். இது அஹ்மதிகள் மூலமாக உலகில் பெரும்பாலான இடங்களில் ஏற்பட்டுள்ள தாக்கமாகும். ஜெர்மனி அல்லது வேறெங்கு சென்றாலும் இதுபோன்றவற்றை பேசும் போது மக்கள் இதனை எடுத்துரைக்கின்றனர். எனவே இந்த தாக்கத்திற்கு ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு பிள்ளையும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். தனது எண்ணத்தை உயர்வானதாக வைக்க வேண்டும். எவ்விதமான தாழ்வு மனப்பான்மைக்கும் ஆளாகி விடக் கூடாது. இந்த மக்கள் நமது பேச்சைக் கேட்பதற்குத் தயாராக உள்ளனர். தயாராக மட்டும் அல்லாமல் அதனை விரும்புகின்றனர். மேலும் அதனை கடைபிடிக்க ஆசைப்படுகின்றனர்.

இதனைப் போன்று இங்கு Church of Jesus Christ –ன் மர்ரோ அப்ரே சாஹிப் கூறுகின்றார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அமைதி பற்றிய கருத்தை எந்த அளவு மிகவும் எளிதாகப் புரியும் வகையில் கூறினார்கள் என்றால், அதனை ஒவ்வொரு ஆஸ்திரேலியரும் மிகவும் எளிதாக புரிந்து கொள்ள முடியும். இன்று இந்த அறையிலுள்ள ஒவ்வொருவரின் உள்ளத்து ஓசையும் இதுவாகத்தான் இருந்தது. அதாவது அமைதியினை நிலைநாட்டுவதற்கு அன்பு என்ற ஒரேயொரு வழிதான் உள்ளது. இது மிகவும் நல்லதாக அமைந்து விட்டது. இன்று நாங்கள் எங்களது கம்யூனிட்டிக்கு இந்த தூதுச் செய்தியை எடுத்துக் கொண்டு செல்வோம் என்றார்.

அடுத்து ஒரு விருந்தினர் கூறினார்: நானும் எனது மனைவியும் கடந்த 18 வருடங்களாக உண்மையைத் தேடிக் கொண்டிருக்கின்றோம். இன்று இரவு நாங்கள் கேட்ட அனைத்தும் உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஆற்றிய சொற்பொழிவு ஒரு முழுமையான தூதுச் செய்தியாகும். தற்போது நாம் அனைவரும் இதன்படி செயல்பட வேண்டும். நாம் இந்த தூதுச் செய்தியை உள்ளத்தில் பதித்து விட வேண்டும். கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அமைதி எவ்வாறு நிலைபெறும் என்று மட்டும் கூறவில்லை. மாறாக அமைதி ஏற்படவில்லை என்றால் என்ன நடைபெறும்? என்பதைப் பற்றியும் கூறினார்கள் என்றார்.

இதனைப் போன்று அங்குள்ள ஒரு பிரசித்தி பெற்ற சேனல் ABC - Australian Broadcasting Corporation. இது ஒரு அரசாங்க சேனல் ஆகும். அதன் ஒரு நிரூபர் தனது தாக்கத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார். அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சொற்பொழிவு அருள் நிறைந்ததாகவும், கருத்துச்செறிவு மிகுந்ததாகவும், நேர்மையானதாகவும் இருந்தது. இந்த சொற்பொழிவு எங்களது அறிவை திறந்து விட்டது என்று கூறினார்.

அடுத்து ஒரு பெண் விருந்தினரான ஆங்கிரின் கிரின் கூறினார்: நான் இன்று மிகச்சிறந்த ஒரு நிகழ்ச்சியல் கலந்து கொண்டதை எண்ணி மிகவும் பெருமையாகக் கருதுகிறேன். நான் உலகில் அமைதி ஏற்படுவதைப் பற்றி பேசியதைக் கேட்டு சிறந்த தாக்கத்திற்கு ஆளானேன். நான் இன்று இதனை வெளிப்படையாகக் கூறுகின்றேன். அதாவது

உங்களது கொள்கை எனக்கு பிடித்திருக்கின்றது. எனது நாட்டினரும் இந்தக் கொள்கையை உறுதியுடன் பிடித்துக் கொள்ள வேண்டும் என நான் ஆசைப்படுகின்றேன். மேலும் நீங்கள் உங்களது தூதுச் செய்தியை மக்கள் வரை எட்ட வைக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன். இது நமக்கு மிகவும் அவசியமானதாகும். இவற்றை கூறிக் கொண்டிருக்கும் போது அவரது கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

ஒரு கவுன்சிலர் வந்திருந்தார். அவர் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தைக் குறித்து கூறுகின்றார்: இவர் நாக்ஸ் நகரத்தைச் சேர்ந்தவர் ஆவார். இமாம் ஜமாஅத்தின் பேச்சிலிருந்து இது தெரிய வருகிறது. நீங்கள் உண்மையில் உங்களது மார்க்கமாக இருக்கக்கூடியதைப் பரப்புகின்றீர்கள். அதாவது அமைதி மற்றும் சாந்திக்கான மதத்தைப் பரப்புகின்றீர்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் மிகவும் சரியாகக் கூறினார். அதாவது அமைதி மூலம் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதே உண்மையில் அமைதியினை நிலைநாட்டுவதாகும். இந்த நாடு ஆஸ்திரேலியா 200 வருடங்கள் பழைய வரலாற்றைக் கொண்டதாகும். அதாவது அப்ரோஜினல் தான் இந்த நாட்டின் அசல் குடிமக்கள் ஆவர். அவர்களைத் தவிர மற்றவர்கள் 200 வருடங்களுக்கு முன்பு தான் இங்கு வந்தனர். இன்று ஒரு மார்க்கத் தலைவர் இந்த அளவு அழகிய மிகவும் அற்புதமான தூதுச் செய்தியை எடுத்துரைத்ததைப் பார்க்கும் போது ஆஸ்திரேலியாவில் ஒரு புதிய காற்று வீசியது போன்று இருந்தது.

அவர் கூறுகின்றார்: நான் இந்த விசயங்களை எனது மனைவியிடமும் கூறினேன். அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்களின் கலப்பற்ற அன்பு, அவர்களது முகம் மற்றும் உணர்வுகளிலிருந்து வெளிப்படுகின்றது. இந்த அஹ்மதிய்யா அமைப்பு இன்னும் அதிகமாக வெளியில் வர வேண்டும். மேலும் பலருக்கும் தனது அமைதி மற்றும் அன்பிற்கான தூதுச் செய்தியைப் பரப்ப வேண்டும்.

எனவே தற்போது ஆஸ்திரேலியாவின் அஹ்மதிகளின் பணி, இதனை கையில் எடுத்துக் கொண்டு முன்னேற வேண்டும்.

அங்கு ஒரு பாகிஸ்தானின் முஸ்லிமும் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: நான் இதனையும் கூற விரும்புகின்றேன். இந்த நிகழ்ச்சியில் இருந்த கண்ணியம், இதற்கு முன்பு வெறெந்த நிகழ்ச்சியிலும் நான் கண்டதில்லை எனக் கூறினார்.

சுமாலியாவுடைய கவுன்சில் ஜெனரலும் அங்கு வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: நான் உங்களது ஒவ்வொரு வார்த்தையையும் மிகவும் கவனமாகக் கேட்டேன். அது என் மீது சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

குவைத்தைச் சேர்ந்த காலிப் ஜாபிர் சாஹிப் கூறுகின்றார்: Arab Spring பற்றிய உங்களது விளக்கத்தைக் கேட்டு சிறந்த தாக்கத்திற்கு ஆளானேன். உங்களது இந்த சொற்பொழிவில் நீங்கள் தைரியமிக்கவராகத் தென்பட்டீர்கள். மேலும் நீங்கள் கூறிய அனைத்தும் உண்மையானதாகும்.

எனது சொற்பொழிவு இந்த அளவு விளக்கமாக, முழுமையாக இருக்கும் என நினைக்கவில்லை. இங்கு எண்ணற்ற மக்கள் இருந்தனர். நான் கூறியது போன்று 220 பேர் இருந்தனர். அனைவரும் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தை எடுத்துரைத்தனர். அவற்றுள் சிலவற்றை நான் எடுத்துரைத்தேன். அதன் பின்னர் சந்திப்பும் நடைபெற்றது. அங்குள்ள மக்களிடம் நான் பார்த்தேன். அவர்கள் மிகவும் பற்றுடன் சந்திப்பவர்கள் ஆவார்கள். வெளிப்படையில் தனது ஒழுக்கத்தைக் காட்டுபவர்கள் அல்லர். மாறாக அவர்களது கூற்றிலும் தாக்கம் இருந்தது. மேலும் அவர்களிடம் ஏற்பட்ட தாக்கத்தினை வெளிப்படுத்திய பிறகும் என்னைச் சந்திக்கும் போது மீண்டும் வெளிப்பட்டது.

இங்கு மெல்போர்னில் ஒரு அஹ்மதிய்யா சென்டரும் வாங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு குத்பாவில் இதனைப் பற்றி எடுத்துரைக்கவில்லை. எனவே இதைப் பற்றி கூறி விடுகின்றேன். நாம் மெல்போர்னில் வாங்கிய சென்டர் ஏழரை ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதாகும். இதன் கட்டடம் கட்டப்பட்டே இருந்தது. இதன் மேற்பரப்பு 2500 சதுர மீட்டர் ஆகும். மேலே மெயின் ஹாலும் உள்ளது. அதில் கணிப்பின் அடிப்படையில் 3000 பேர் வரை தொழ முடியும். அதிர்ஷ்டவசமாக இது கிப்லாவை நோக்கி உள்ளது. ஏனைய ஹால்களையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக 4000 பேர் வரை தொழலாம். மிசன் ஹவுல், விருந்தினர் இல்லம், இரண்டு தங்குமிடம், நூலகம், வாசிக்கும் அறை, சமையலறை, ஸ்டோர், இதைத் தவிர ஒரு சிறிய ஹாலும் உள்ளது. இதற்கு 3 பார்கிங் இடவசதி உள்ளது. அதில் 200 ஊர்திகள் நிறுத்தி வைக்க முடியும்.

ஆகஸ்ட் 2007 –ல் நாங்கள் இடம் வாங்க விரும்புகின்றோம் என விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது. அண்டை அயலார் பலர் ஆட்சேபனை செய்தனர். இங்கு முஸ்லிம்கள் தனது வணக்கஸ்தலத்தை ஏற்படுத்த அனுமதிக்கக் கூடாது என அவர்கள் கூறினர். ஆனால் இறைவனது அருள் மற்றும் கருணையின் மூலம் ஏறக்குறைய ஒன்றரை வருடம் காத்திருந்த பின்னர் 2009 –ல் இந்த சென்டரை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு வழங்க நகர கவுன்சில் முடிவு செய்தது. இந்த முடிவில் அனைத்து கவுன்சிலர்களும் பாகுபாடுயின்றி நமக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கினர்.

இது முதலில் ஒரு கிளப் ஆகவும், பார்க் ஆகவும் இருந்தது. பிறகு அதன் Status மாற்றப்பட்டு கம்யூனிட்டி சென்டர், மிசன் ஹவுஸ் ஆக இது பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் நான் கூறியது போன்று பலரது கருத்தையும் உங்களிடம் கூறினேன். பலரது கருத்தும் அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பாக முற்றிலும் மாறிவிட்டது. இந்த சென்டர் வாங்குவதற்கு 8 இலட்சம் டாலர் செலவானது. பிறகு இது பழுது பார்க்கப்பட்டு சீரமைக்கப்பட்டது. ஏறக்குறைய 3 மில்லியன் அதாவது 13 இலட்சம் டாலர் செலவானது. இதைத் தவிர நமது வழக்கத்திற்கேற்ப வகாரே அமல் செய்யப்பட்டு 5 இலட்சம் டாலர் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது. தோராயமாக இதன் இன்றைய மார்கெட் ரேட்டைப் பார்த்தால் குறைந்தபட்சம் இது 5 மில்லியன் டாலர் ஆகும். இது அல்லாஹ்வின் கருணையாகும். அவன் மிகவும் மலிவாக ஜமாஅத்திற்கு பொருள்களை வழங்கி விடுகின்றான்.

பிறகு சிட்னிக்குத் திரும்பி வந்தோம். இங்கு கிலாஃபத் ஜூப்ளி ஹால் கட்டப்பட்டிருந்தது. அது திறக்கப்பட்டது. இதில் 1400 பேர் வரை தொழலாம். இரண்டு மாடி அலுவலகங்கள் கட்டப்பட்டுள்ளன. மீட்டிங் அறை, லஜ்னா மற்றும் ஏனைய கிளை அமைப்புகளுக்கான அலுவலகங்கள், பெரிய மெயின் சமையலறை போன்றவை உள்ளன. இதில் லங்கர் கானா செயல்படுகின்றது. ஹாலில் Indoor Game போன்றவைகளை விளையாடலாம்.

மேலும் இங்கு ஆஸ்திரேலிய பிரதமரின் பிரதிநிதியாக அங்குள்ள ஒரு பாராளுமன்ற உறுப்பினர் திறப்பு விழாவின் போது அங்கு வந்திருந்தார். அவரது பெயர் கன்ஸேடா பேரவான் தீவெல்ஸ் ஆகும். Federal Member of Parliament வந்திருந்தார். Minister of Citizenship வந்திருந்தார். எதிர்க்கட்சித் தலைவர் வந்திருந்தார். இதைத் தவிர பாராளுமன்ற உறுப்பினர்கள் வந்திருந்தனர். Parlimentary Secretary Law and Justice, Area Commander, Police Officer, Councillors, மேலும் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் அதில் கலந்து கொண்டனர். அல்லாஹ்வின் அருளால் இங்கு கிலாஃபத் ஜூப்ளி உடைய ஹால் திறக்கப்பட வேண்டியதிருந்தது. எனவே இங்கு இஸ்லாமிய போதனைகள், அஹ்மதிய்யா ஜமாஅத் என்றால் என்ன? அஹ்மதிய்யா கிலாஃபத்தின் பணிகள் என்ன? இதைப் பற்றி நான் எடுத்துரைத்தேன். அல்லாஹ்வின் அருளால் இங்கும் சிறந்த தாக்கம் மக்களிடம் ஏற்பட்டது.

ஒரு Police Superintendent கூறினார்: அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாம் இந்த விசயத்தை அதாவது இஸ்லாத்திற்கு தீவிரவாதிகளின் செயல்கள் தான் அவப்பெயரை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். இவற்றைக் கேட்டு நான் சிறந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். இந்தக் கருத்திற்கு அவர்கள் அமைதியுடன் இணைத்து எவ்வாறு பதில் அளித்தார்கள் என்றால் அது மிகச் சிறந்ததாக இருந்தது என்றார்.

அடுத்து இன்னொரு விருந்தினர் இந்திரா தேவி கூறினார்: இந்த சொற்பொழிவு மிகவும் சிறந்ததாகவும், உயர்ந்த கருத்துக்களைக் கொண்டதாகவும் இருந்தது. நான் இஸ்லாத்தைப் பற்றி அறிய சில நூல்களைப் பெற விரும்புகின்றேன். அதன் மூலம் நான் இஸ்லாத்தை சிறந்த முறையில் அறிய வேண்டும். நான் இஸ்லாத்தைக் குறித்த சில சந்தேகங்களில் உள்ளேன். பொதுவாக இந்த அமைப்பு எனக்கு கண்ணியத்திற்குரியதாக அமைந்திருக்கின்றது என்றார்.

அவர்கள் சந்தேகத்தில் ஏன் உள்ளனர்? முஸ்லிம்களில் பல பிரிவுகள் இந்த விசயங்களுக்கு எதிராக உள்ளது. எவ்வாறிருப்பினும் அங்குள்ள மக்கள் இவர்களை தொடர்பு கொள்ள வேண்டும். இவர்களுக்கு நூல்களைக் கொடுக்க வேண்டும். இங்கும் பலர் தனக்கு ஏற்பட்ட சிறந்த தாக்கத்தை எடுத்துரைத்தனர்.

இதன் பின்னர் ஆஸ்திரேலியாவின் பெரிஸ்பனில் பள்ளிவாசல் திறப்பு விழா நடைபெற்றது. அதனை குத்பாவில் கேட்டிருப்பீர்கள். இங்கும் திறப்பு விழாவிற்குப் பின்னர் ஒரு வரவேற்பு நிகழ்ச்சியும் இருந்தது. இதில் வாழ்வில் பல துறைகளில் தொடர்பு கொண்டுள்ளவர்களும் வந்திருந்தனர். பாராளுமன்ற உறுப்பினர்களும் வந்திருந்தனர். காவல்துறை அதிகாரிகள், மருத்துவர்கள், புரொஃபொஸர்கள், ஆசிரியர்கள், பொறியாளர்கள், மேலும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், சர்ச்சைச் சேர்ந்த மக்கள், பாதிரிமார்கள், அண்டை அயலார்கள் போன்றோர் அதில் கலந்து கொண்டனர்.

ஒரு அண்டை வீட்டார் மிஸ்டர் கிளாஸ் கிரம். இவர் யூதர் ஆவார். அவர் பள்ளிவாசல் கட்டுவதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். ஆனால் அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் செயல்பாடுகளைக் கண்ட பின்னர் அவரது செயல்பாடு மாறி விட்டது.

அடுத்து ஒரு அண்டை வீட்டார் மிஸ்டர் ராவ்பூ கிராம். இவர் கடுமையான எதிரியாக இருந்தார். ஆனால் இவரது தப்பெண்ணம் களையப்பட்ட போது பிறகு நண்பராகி விட்டார். ஜமாஅத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டார். இதைப் போன்று பல நண்பர்கள் உள்ளனர்.

பிறகு நகர கவுன்சில் உடைய டெபுட்டி மேயர். இவர் இதே பகுதியைச் சேர்ந்தவராவார். அவர் கூறுகின்றார்: அஹ்மதிய்யா அமைப்பு மனிதயினசேவையில் மிகவும் முன்னேறி உள்ளது. அஹ்மதிய்யா அமைப்பு உடைய உயர்ந்த தொண்டுகள் ஏனைய அமைப்புகளை விட இதனை உயர்த்திக் காட்டுகிறது. இது ஒவ்வொரு வருடமும் ஆஸ்திரேலியாவின் கீளின் அப் –ன் போது, சுத்தம் செய்வது, ரெட் கிராஸ் –ற்காக ஃபண்டு வசூல் செய்வது, இரத்த தானம் செய்வது போன்ற ஏனைய தொண்டுகளைச் செய்கிறது. இதைப் போன்று குயுனின் லேண்டில் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் வந்த புயல்காற்றின் போது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 50 பேர் தொடர்ந்து 2 வாரங்கள் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று தொண்டாற்றினர்.

அவர் கூறுகின்றார்: வெளிநாடுகளிலிருந்து ஹிஜ்ரத் செய்து இங்கு வரக்கூடிய மக்கள் சமூகத்துடன் ஒன்றி வாழ்வதில்லை எனக் கூறப்படுகின்றது. ஆனால் நாங்கள் இதனை வெளிப்படையாகக் கூறுகின்றோம். அதாவது அஹ்மதிய்யா அமைப்பு குறித்து இவ்வாறு ஒருபோதும் கூற முடியாது. இவர்கள் ஆஸ்திரேலியாவுடன் அன்பு செலுத்துபவர்கள் ஆவர். இந்த நாட்டிற்காக கண்ணியத்திற்குரிய பணிகளைச் செய்கின்றனர். இந்த அன்பும், ஒற்றுமையும் தான் இன்று உலகிற்குத் தேவை. அங்கு போலீஸ் கமிசனரும் வந்திருந்தார். அவரும் ஜமாஅத் பணிகளை வெகுவாகப் பாராட்டினார். ஜமாஅத் எப்போதும் எங்களுடன் சேர்ந்து பணியாற்றுகின்றது. அனைவருடனும் கண்ணியத்துடன் பழகுகிறது. நீங்கள் உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துகின்றீர்கள் என அவர் கூறினார். இவர் பேசி முடித்து விட்டு போன பிறகு எனது அருகில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உட்கார்ந்திருந்தார். அவர் என்னிடம் இந்த கமிசனருக்கு மிகவும் உயர்ந்த கண்ணியம் அளிக்கப்படுகிறது. பொதுவாக இவர் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளமாட்டார். ஆனால் இவர் உங்களது நிகழ்ச்சிக்கு வந்தது எனக்கு மிகவும் ஆச்சரியமாய் இருக்கின்றது என்றார்.

அடுத்து ஒரு பாராளுமன்ற உறுப்பினர் எனது சொற்பொழிவைக் கேட்ட பின்னர் என்னிடம் நான் உணர்ச்சியால் நிரம்பி விட்டேன். அளவின்றி சிறந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன் என்றார். இங்கு ஆற்றப்பட்ட சொற்பொழிவு இந்த பள்ளிவாசல் தொடர்பாக அனைவரையும் நிம்மதி அடையச் செய்து விட்டது என்றார். இமாம் ஜமாஅத்தின் சொற்பொழிவின் போது குறிப்பாக நான் பார்வையாளர்களின் முகங்களைப் பார்த்தேன். அப்போது மக்கள் இமாம் ஜமாஅத் உடைய சொற்பொழிவை மிகுந்த ஆவலுடன் கேட்டுப் பாராட்டுவது தெரிய வந்தது எனக் கூறினார்.

அங்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இருந்தார். அவருடன் தப்லீக் சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஏறக்குறைய இவர் அவர் தான் என நினைக்கின்றேன். அவருடன் அறிவியல் தொடர்பாக திருக்குர்ஆன் என்ன கூறுகிறது? பைபிள் என்ன கூறுகிறது? எனப் பேசப்பட்டது. அவர் பைபிளை விட திருக்குர்ஆனின் போதனைகள் உயர்ந்ததாகவும் சிறந்ததாகவும் இருக்கின்றது என்பதை நான் ஒப்புக் கொள்கின்றேன் என்றார். பிறகு நான் அவரிடம் திருக்குர்ஆனை ஓதுங்கள் என்றேன். மேலும் அங்குள்ள உள்ளூர் அஹ்மதிகளிடம் சில வசனங்களின் ஆதாரம் கொடுங்கள் என்றேன். மேலும் திருக்குர்ஆன் தப்ஸீரின் 5 தொகுதியும் கொடுக்கப்பட்டது. இவ்வாறு அல்லாஹ்வின் அருளால் தப்லீகிற்கான வழிகளும் திறக்கின்றன.

டாக்டர் ஜான் என்ற ஒரு விருந்தினர் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: நான் இன்று இரவு இங்கு வருவதற்கு முன்பு மிகவும் அச்சம் அடைந்தேன். ஏனென்றால் நான் முஸ்லிம் இல்லை. மேலும் என்னுடன் எவ்வாறு அணுகுவார்கள் என்பது எனக்கு தெரியாது. ஆனால் இன்று மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் எனது அனைத்து விதமான அச்சத்தையும் விலக்கி விட்டார்கள்.

இது ஆஸ்திரேலியா சம்பந்தப்பட்ட ஒரு சிறிய குறிப்பு ஆகும்.

அதன் பின்னர் நாங்கள் நியூசிலாந்து சென்றோம். அங்கு முதன் முதலாக கட்டப்பட்ட பள்ளிவாசல் பைத்துல் முக்கீத் திறக்கப்பட்டது. ஆனால் திறப்பு விழாவிற்கு முன்பு மோரி என்ற அங்குள்ள பழங்குடி இனம் உள்ளது. அதன் மன்னர் சார்பாக வரவேற்பு நிகழ்ச்சி இருந்தது. அங்கு ஏனைய மாநிலத் தலைவர் வரும் போது வரவேற்பதைப் போன்று எங்களை வரவேற்றார். அங்கு அவர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொடியைத் தானே ஏற்றினார். அது அங்கு முதலிலேயே அவர்களது கொடியுடன் ஏற்றப்பட்டது. மன்னர் பொதுவாக இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் அங்கேயே உட்கார்ந்திருப்பார். ஆனால் மன்னர் எனது அருகில் அமர்ந்திருந்தார். பிறகு அவர்களது மரபுசார்ந்த நிகழ்ச்சி நடைபெற்றது. அதன் பின்னர் அவர்களது பெரிய ஒரு ஹாலுக்குள் அழைத்துச் சென்றனர். அங்கு அவருடன் சில விசயங்கள் பேசப்பட்டன. பின்னர் மோரி மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட திருக்குர்ஆன் அவருக்கு வழங்கப்பட்டது. இது மிகவும் சிறந்ததொரு நிகழ்ச்சியாக இருந்தது.

அதன் பின்னர் பள்ளிவாசல் திறப்பு விழாவிற்கு மன்னர் அவர்கள் வர வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டது. இவரது ராணி முதலில் பள்ளிவாசல் திறப்பு விழாவிற்கு வரவில்லை எனக் கூறியிருந்தார்கள். ஆனால் பின்னர் நானும்

வருவேன் எனக் கூறினார்கள். பின்னர் அந்த நிகழ்ச்சிக்கு இன்னும் பல நபர்களுடன் அவர்கள் இருவரும் வந்தனர். திருக்குர்ஆன் மோரி மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டது தொடர்பாக முதலில் நான் கூறி விடுகின்றேன்.

கண்ணியத்திற்குரிய சக்கீல் அஹ்மது முனீர் சாஹிப் அவர்கள் தான் இந்த மொழியாக்கத்தைச் செய்துள்ளார்கள். ஆரம்பத்தில் 15 பாகம் வரை செய்திருந்தார்கள். அது வெளியிடப்பட்டது. பிறகு அதனை தற்போது முழுமை செய்து விட்டார்கள். இவர் இந்த மொழியில் மேதை இல்லை என்றாலும் இயற்பியலில் புரொஃபொஸர் ஆவார். நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் உடைய கூற்றிற்கேற்ப இந்த மொழியைக் கற்றார். பிறகு மொழியாக்கம் செய்ய ஆரம்பித்தார். இவரது வயது 81 ஆகும். 25 வருடங்கள் இவர் இதற்காக செலவு செய்துள்ளார். மொழியையும் கற்று மொழியாக்கமும் செய்துள்ளார். இவருக்கு இதற்காக நீண்ட காலம் தேவைப்பட்டது. ஏனென்றால் மோரி மொழியில் பன்மை இலக்கணத்தைப் புரிவதற்கு நீண்ட காலம் ஆனது எனக் கூறுகிறார். மேலும் எனது வயதும் ஒரு மிகப்பெரிய தடையாக இருந்தது என பின்னர் எழுதியுள்ளார்.

எவ்வாறிருப்பினும் மிகவும் கஷ்டப்பட்டு தொடர்ந்து இவர் இந்தப் பணியைச் செய்துள்ளார். பல தடைகளும் வந்தன. கஷ்டங்களும் ஏற்பட்டன. மற்றவர்களைக் கொண்டு மொழியாக்கம் செய்யப்பட்டது. அது தரம் வாய்ந்ததாக இருக்கவில்லை. பின்னர் மீண்டும் தானே செய்ய வேண்டும் எனத் தோன்றியது. இந்த வயதில் இந்தப் பணியைச் செய்வது என்பது மிகப்பெரிய விசயமாகும். அல்லாஹ் இதற்கான நல்கூலியை இவருக்கு வழங்குவானாக!

அங்குள்ள பத்திரிகைகளும் இது குறித்து எழுதியுள்ளன. இதனைப் பாராட்டியுள்ளன. என்னிடமும் இவ்வளவு சிறிய சமுதாயத்திற்காக நீங்கள் திருக்குர்ஆனை ஏன் மொழியாக்கம் செய்தீர்கள் எனக் கேட்டனர். அதற்கு நான், ஒவ்வொரு மொழியிலும் திருக்குர்ஆனை மொழியாக்கம் செய்வது எங்களது பணியாகும். ஏனென்றால் எல்லாருக்கும் அரபி மொழி படிக்கத் தெரியாது. இஸ்லாத்தின் தூதுச் செய்தியை ஒவ்வொரு சமுதாயம் வரையிலும் எட்ட வைக்க வேண்டும். அல்லாஹ்வின் அருளால் அங்கு மோரி சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் பைஅத்தும் செய்தார். மேலும் இருவர் பைஅத் செய்யத் தயாராக உள்ளனர். நான் இதனைத் தான் கூறினேன். அதாவது தற்போது மோரி மொழியில் திருக்குர்ஆன் வெளிவந்து விட்டது. இன்சா அல்லாஹ் மக்கள் இதன் மூலம் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவார்கள்; இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்றேன்.

இதைத் தவிர அங்கு, நான் கூறியது போன்று பைத்துல் முக்கீத் என்ற புதிதாக கட்டப்பட்ட பள்ளிவாசல் தொடர்பாக வரவேற்பு நிகழ்ச்சியும் இருந்தது. நான் கூறியது போன்று மோரி மன்னர் மற்றும் ராணி தவிர பல முக்கிய பிரமுகர்கள் அங்கு வந்திருந்தனர். நாட்டின் பிரிண்ட் மற்றும் எலக்ட்ரிக் மீடியாவுடன் தொடர்புடைய மக்கள் அங்கு வந்திருந்தனர். 107 பேர் விருந்தினராக வந்திருந்தனர். மேலும் விருந்தினர்கள் தங்களுக்கு ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி எடுத்துரைத்தார்கள்.

அங்கீலிகன் சர்ச் உடைய ஒரு பாதிரியார் கூறினார்: அனைத்து மார்க்கங்களும் ஒருவர் மற்றவரை எந்த விதமான வேற்றுமை பாராட்டாமல் ஒன்றுபட்டுச் செல்ல வேண்டும் என்று கூறுகிறது. மேலும் அவர் கூறினார்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் கூறியது போன்று ஊடகங்களில் இஸ்லாத்தின் பெயருக்கு அவப்பெயர் ஏற்படுத்தப்படுகிறது என்பது முற்றிலும் உண்மையாகும் என்றார்.

நான் இங்கு பள்ளிவாசல் தொடர்பாக எவ்வாறு இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தப்படுகின்றது. மேலும் முஸ்லிம் அல்லாதவர்கள் மத்தியில் எவ்வாறு ஒரு தவறான கண்ணோட்டம் முஸ்லிம்கள் மீது இருக்கிறது எனக் கூறினேன். பிரஸ் மூலம் இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தப்படுகின்றது என அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் கூறுவது உண்மைதான். எப்போதாவது தீவிரவாத செயல் எங்கேயாவது நடைபெற்றால் ஊடகங்கள் எப்போதுமே பள்ளிவாசல் அல்லது முஸ்லிம்கள் தொழுகின்ற காட்சிகளைக் காட்டுகிறது. இதன் மூலம் முஸ்லிம் அல்லாதவர்கள் இஸ்லாம் மற்றும் தீவிரவாதத்திற்கும் தொடர்பு உள்ளது என நினைக்கின்றனர். உண்மை என்னவென்றால், இஸ்லாத்திற்கும் தீவிரவாதத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. ஜமாஅத்தின் இமாம் அவர்கள் தனது உரையில் இதனை நிரூபித்துக் காட்டி விட்டார்கள் என அவர் கூறினார்.

எவ்வாறிருப்பினும் பிரஸ் மற்றும் மீடியாக்கள் மோரி நிகழ்ச்சியினையும் பள்ளிவாசல் திறப்பு விழாவையும் மிகவும் அதிகமாக வெளியிட்டனர்.

நியூசிலாந்தில் ஒரு நிகழ்ச்சி அவர்களது தலைநகரம் ஆக்லண்டில் இருந்து 800 மைல் தொலைவில் உள்ளது. அங்குள்ள பாராளுமன்றத்தின், பாராளுமன்ற உறுப்பினர் ஒரு சீக்கியர் ஆவார். இவர் இந்தியாவைச் சேர்ந்தவர். கமல் ஜீத் சிங் இவரது பெயர் ஆகும். இவர் தான் இதனை ஏற்பாடு செய்திருந்தார். பாராளுமன்றக் கட்டடத்தில் அவர்களது

கிராண்ட் ஹாலில் – இது அவர்களது பார்வையில் மிகவும் முக்கியமான ஹால் ஆகும். அங்கு இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். தூதுவர்களில் இஸ்ரேலைச் சேர்ந்தவரும், ஈரானைச் சேர்ந்தவரும், இங்கிலாந்தைச் சேர்ந்த டெபுட்டி உயர் கமிசனரும் கலந்து கொண்டனர். காவல்துறை அதிகாரிகளும், யுனிவர்சிட்டி புரொஃபொஸர்களும் வந்திருந்தனர். அங்கும் அமைதியைக் குறித்து இன்று உலகம் என்ன செய்ய வேண்டும்? என்ற கருத்துக்கள் பேசப்பட்டன. இதன் மூலம் நல்ல தாக்கம் ஏற்பட்டது.

நியூசிலாந்தின் கமர்ஷியல் அல்லாத ரேடியோ நெட்வொர்க் செக் பாயிண்ட் என்ற ஒரு நிகழ்ச்சியினை நடத்துகிறது. இது மிகவும் முக்கியமான நிகழ்ச்சியாகும். அதில் Prime Time –ல் நமது நிகழ்ச்சியைக் குறித்து செய்தி வெளியிட்டது. பத்திரிகைகள் மூலம் எந்த அளவு கவரேஜ் கிடைத்துள்ளது என்பதை நான் இறுதியில் கூறுவேன். எவ்வாறிருப்பினும் நியூசிலாந்தில் இந்த இரண்டு நிகழ்ச்சிகள் அந்நியர்கள் மற்றும் பாராளுமற்ற உறுப்பினர்களுடன் இருந்தது.

அதன் பின்னர் நாங்கள் ஜப்பான் சென்றோம். ஜப்பானிலும் நகோயாவில் ஒரு வரவேற்பு நிகழ்ச்சி இருந்தது. அதில் 117 விருந்தினர்கள் கலந்து கொண்டனர். இதில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் நகோயா காங்கிரஸ் கட்சியின் மேயர், மாநில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹிந்தோ மதம், புத்த மதத்தின் பிரதிநிதிகள் பல்வேறு யுனிவர்சிட்டியின் 14 புரொஃபொஸர்கள், வக்கீல்கள், பல்வேறு துறைகளைச் சேர்ந்த விருந்தினர்கள் பலர் வந்திருந்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் மிஸ்டர் யோசியார்க்கி, பாராளுமன்ற உறுப்பினரும் ஆவார். அகதி முகாமின் இன்சார்ஜ் ஆகவும் உள்ளார். இவர் ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தார். அவர் கூறுகிறார்: 2011 –ல் சுனாமி மற்றும் நிலநடுக்கத்திற்குப் பிறகு மனிதயின தொண்டில் ஜமாஅத் அஹ்மதிய்யாவின் தொண்டு மறக்க முடியாத தொண்டு ஆகும். நான் இங்கு அதற்கு நன்றி செலுத்துவதற்காகத்தான் வந்திருக்கின்றேன். மேலும் இந்த ஜமாஅத் மற்றும் அமைப்பின் தலைவரை நேரில் சந்தித்து உங்களது ஜமாஅத் மற்றும் உங்களை ஏற்றுக் கொண்டவர்கள் உங்களது போதனைகளின்படி செயல்பட்டவாறு உங்களது அறிவுரையின்படி செயல்பட்டவாறு மனிதயின உணர்வோடு தன்னை அர்ப்பணித்தவாறு, மனிதயின தொண்டில் மூழ்கியுள்ளனர் எனக் கூற வேண்டும் என வந்துள்ளேன்.

மேலும் நான் சொற்பொழிவைக் கேட்டேன். இதன் மூலம் ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் இமாம் மற்றும் அவர்களது போதனையில் தான் உலக அமைதியின் இரகசியம் மறைந்திருக்கிறது என்பதில் நான் உறுதி கொள்கின்றேன் என்று கூறுகிறார்.

எனவே உண்மையான இஸ்லாமிய போதனையை உலகின் முன் எடுத்து வைக்கும் போது, நல்லியல்பு கொண்ட ஒவ்வொருவரும் அமைதியை நிலைநாட்டுவதில் இஸ்லாத்தை மட்டுமே சார்ந்துள்ளது என்பதை ஏற்காமல் இருக்க முடியாது. அல்லாஹ் இந்த தீவிரவாதிகளுக்கும் அவர்களது சக்தியின் நம்பிக்கை கொண்டுள்ள தவறான காரியங்களைச் செய்கின்ற அந்த தலைவர்களுக்கும் இவற்றைப் புரிய வைப்பானாக!

ஒரு பிரசித்தி பெற்ற வழக்கறிஞரும் அங்கு வந்திருந்தார். அவர் தனக்கு ஏற்பட்ட தாக்கத்தைக் குறித்து கூறுகிறார்: நான் உள்ளத்தின் ஆழத்திலிருந்து அன்பு, நன்றியை வெளிப்படுத்துகின்றேன். 1951 –ல் சான் பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற கான்ஃபரன்ஸில் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் ஜப்பானுடன் தொடர்புடைய அந்த மாபெரும் சொற்பொழிவில், ஜப்பானுடைய நீதி மற்றும் அமைதி உலகிற்கு மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஏனென்றால் எதிர்காலத்தில் ஜப்பான் உலகளாவிய அமைதி மற்றும் உலகளாவிய அரசியலில் ஒரு முக்கிய பங்கு வகிக்கக்கூடியதாகும் என்று கூறினார்கள்.

அப்போது பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற கான்ஃபரன்ஸில் ஜப்பானுடன் மிகவும் மோசமாகப் பரிமாறப்பட்டது. அப்போது ஸஃபருல்லாஹ் கான் அவர்கள் ஜப்பானின் உரிமைக்காகப் பேசினார்கள். அதன் மூலம் மக்களிடம் தாக்கம் ஏற்பட்டது. பிறகு எங்களுடன் நடந்து கொள்ளப்பட்ட நடைமுறையில் மாற்றம் ஏற்பட்டது. அதற்கு நாங்கள் கண்ணியமளிக்கின்றோம். இந்தக் கண்ணியத்தின் காரணமாக அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் எங்களது தொடர்பு உள்ளது. நாங்கள் தொடர்பை வலுப்படுத்த விரும்புகின்றோம். ஆனால் துரதிஷ்டவமாக அந்த மகானுக்கு அவரது நாட்டில் கண்ணியம் அளிக்கப்படவில்லை. அவர் அந்த நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்தார். ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் வரலாற்றில் முதலில் வெளியுறவுத்துறை அமைச்சராக இவர்களது பெயர் எழுதப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அதனை நீக்கி விட்டு, வேறொருவரை முதல் வெளியுறவுத்துறை அமைச்சராக எழுதி, ஒரு தவறான வரலாற்றை பிள்ளைகளுக்கு கற்பிக்கின்றனர்.

அடுத்து அவர் கூறுகின்றார்: ஜப்பானில் வந்த சுனாமி மற்றும் பூகம்பத்தில் ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் பணி மறக்கத்தக்கதல்ல. ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் உறுப்பினர்களின் செயல்பாடு மற்றும் நடத்தை – எந்த நாட்டில் வசிக்கின்றார்களோ அந்த நாட்டுடன் பற்றுணர்வு போன்றவை இந்த ஜமாஅத்தை உலகில் மேலோங்கி நிற்கச் செய்கிறது. எனவே இவற்றை ஒவ்வொரு அஹ்மதியும் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும் கூறுகின்றார்: நாங்கள் இன்று இஸ்லாத்தின் அழகிய முகத்தினைப் பார்த்தோம். மேலும் உலகம் ஏதாவது ஒரு கையில் ஒன்றுசேர முடியும் என்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கை ஆகும். அதற்கு ஒரேயொரு இமாம் தான் உள்ளார் என நாங்கள் உறுதிகொள்கின்றோம்.

இதைப் போன்று பல மக்களுடைய தாக்கங்களும் இருக்கின்றன. எவ்வாறிருப்பினும் இவற்றை விளக்கமாக எடுத்துக் கூற முடியாது. இவற்றில் ஒரு சிலவற்றை நான் சுருக்கமாக எடுத்துரைத்துள்ளேன். மக்களின் தாக்கங்களைப் பற்றி முழுமையாக எடுத்துரைக்கவில்லை என்றாலும் அது விளக்கமாக வெளியிடப்படும். ஆங்கிலம் அறிந்தவர்களுக்காக அல் ஃபஸ்ல் போன்ற ஏனைய பத்திரிகைகளிலும் வெளியிடப்படும். மேலும் இந்த செய்திகளை வெளியிட்ட செய்தித்தாள்களின் சர்குலேசன் அதாவது சுற்றுப் பயணத்தைப் பற்றி, வரவேற்பு நிகழ்ச்சியைப் பற்றிய சய்திகள், நேர்காணல் தொடர்பான செய்திகள், இஸ்லாத்தின் – ஜமாஅத்தின் தூதுச் செய்தி எட்ட வைக்கப்பட்டது குறித்த நேரலை ஆக டி.வி.யிலும், ரேடியோவிலும் வெளியாகியுள்ள செய்திகள் பற்றி சிறிது கூறுகின்றேன்.

முதலில் இந்தேனேஷியாவிலுள்ள இரண்டு பத்திரிகை நிரூபர்கள் வந்திருந்தனர். ஒன்று, டெம்போ மேகஸைன் ஆகும். இது வாராந்திர வெளியீடாகும். இது நேர்காணலை வெளியிட்டது. இது மிகவும் பிரசித்தி பெற்ற பத்திரிகை ஆகும். இது ஒவ்வொரு வாரமும் ஒரு இலட்சம் பிரதிகளை வெளியிடுகிறது. இதைத் தவிர மற்றொரு பத்திரிகையும் இதனை வெளியிட்டது.

அடுத்து மேற்கு ஜாவாவுடைய இரண்டு பத்திரிகைகளான டிரிபூன் ஜப்பார், பிக்கிரன் ரக்யாத். இது 60, 70 ஆயிரம் பிரதிகள் வரை இது வெளியிடுகிறது. மற்றொரு பத்திரிகையும் அதன் பிரதிகளின் எண்ணிக்கையும் அதிகமாகும். அதுவும் வெளியிட்டது.

ஆஸ்திரேலியாவில் எலக்ட்ரானிக், பிரிண்ட் மீடியா நிகழ்ச்சிகளை கவரேஜ் செய்தது. தேசிய டி.வி. ABC மற்றும் தேசிய ரேடியோ ABC –யும் நேர்காணல் எடுத்தனர். செய்திகளையும் வெளியிட்டனர். நான் கொடுத்த பதில்களை மிக விளக்கமாக எழுதியுள்ளனர். இந்த நிகழ்ச்சிகள் ரேடியோ, டி.வி மூலமாக முழு நாட்டிலும் கேட்கவும், பார்க்கவும் செய்யப்பட்டன. மேலும் ரேடியோ பசிபிக் தீவுகளில் கேட்கப்படுகின்றது. ஒன்றரை முதல் இரண்டு மில்லியன் மக்கள் வரை இதனைக் கேட்கின்றனர். ABC, ஆஸ்திரேலியாவின் தேசிய செய்திச் சேனல் ஆகும். இதன் ஒளிபரப்பை 46 நாடுகளில் பார்க்கின்றார்கள். 10 மில்லியனை விட அதிகமான மக்கள் இதனைக் கேட்கின்றனர். என்னிடம் நேர்காணல் எடுத்த இந்தச் சேனல் ஆஸ்திரேலியாவை விட்டு வெளியிலும் இது கேட்கப்படுகிறது. இதனைக் குறித்து எனக்கு நல்ல Feedback கிடைத்துள்ளது. உலகில் மக்கள் இந்த அளவு இதன் பக்கம் கவனம் செலுத்தியுள்ளார்கள் என்பதைப் பார்க்கும் போது வியப்பாக இருக்கின்றது. நீங்கள் அடுத்த முறை வரும் போது அதிக நேரம் எடுத்து உங்களிடம் நேர்காணல் செய்ய விரும்புகின்றேன் என அந்த நிரூபர் கூறினார்.

ஆஸ்திரேலியாவின் டி.வி. சேனல் ABC –யின் பிரசித்தி பெற்ற மிகவும் முக்கியமாகக் கருதப்படும் நியூஸ் லைன் –ல் இந்த நேர்காணல் வந்தது. இதனை 46 நாடுகள் பார்க்கின்றன. இந்த நேர்காணல் செய்பவர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து வரும் தலைவர்கள், அமைச்சர்களை நேர்காணல் செய்பவர்கள் ஆவர். இவர்களது நிகழ்ச்சிகள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டு பார்க்கப்படுகின்றது. நான் கூறியது போன்று இதனை 10, 15 மில்லியன் மக்கள் கேட்டனர்.

பிறகு நியூசிலாந்தின் பத்திரிகையைக் குறித்து மீடியாவை பார்த்தோம் என்றால், டி.வி 1–ல், மோரி டி.வி. புக்கராரே காண்பிக்கப்படுகின்றது. இதில் மோரி மன்னர் சார்பாக கொடுக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சி தொடர்பான கவரேஜ் காண்பிக்கப்பட்டது. நாடு முழுவதும் இந்த நிகழ்ச்சி காண்பிக்கப்பட்டது. டி.வி. 1–ல் நாட்டில் முதலிடத்திலுள்ள உடனுக்குடன் செய்திகளை வழங்கக்கூடிய பழைய நியூஸ் சேனல் ஆகும். இதனை தினமும் 6 இலட்சத்து 42 ஆயிரம் பேர் பார்க்கின்றனர். பைத்துல் முக்கீத் பள்ளிவாசல் திறப்புவிழாவின் அறிக்கையை இவர்கள் காண்பித்துள்ளனர். மோரி மன்னருடன் நடைபெற்ற நிகழ்ச்சி ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டது.

பத்திரிகைகள் பள்ளிவாசல் தொடர்பாக செய்திகளில் எனது சுற்றுப்பயணத்தைக் குறித்தும் வெளியிட்டுள்ளனர். சன்டே ஸ்டார். இது நாட்டின் பெரிய பத்திரிகை ஆகும். இது தினமும் 1 இலட்சத்து 60 ஆயிரம் பிரதிகளை வெளியிடுகின்றது.

ஆனால் இதனை 5 இலட்சத்திற்கும் அதிகமானோர் படிக்கின்றனர். எனது கருத்தின்படி இது இன்டர்நெட்டிலும் படிக்கப்படுகின்றது.

பிறகு மன்னுக்காவு கொரியர் – இது ஆக்லேண்ட் உடைய பத்திரிகை ஆகும். இது தினமும் 69 ஆயிரம் பிரதிகளை வெளியிடுகின்றது. ஆனால் 1 இலட்சத்து 93 ஆயிரம் பேர் இதனைப் படிக்கின்றனர். காத்து டைம் – இதனை படிப்பவர்கள் 96 ஆயிரம் பேர் ஆவர். ஆன்லைன் மீடியா வெப்ஸைட் ஹஃக் – இது நாட்டின் பிரசித்தி பெற்ற இணையதளம் ஆகும். இதனை தினமும் நாலரை இலட்சம் பேர் பார்க்கின்றனர். இதிலும் பள்ளிவாசல் திறப்பு விழா தொடர்பான செய்தி வெளியிடப்பட்டது.

பிறகு ஜப்பானில் பிரிண்ட் மீடியா உள்ளது. அஸாயி என்ற ஒரு பெரிய பத்திரிகை உள்ளது. தினமும் 2 கோடிக்கும் அதிகமான பிரதிகளை வெளியிடுகின்றது. இதுவும் எனது சுற்றுப்பயணம் தொடர்பான செய்தியை எனது படத்துடன் வெளியிட்டுள்ளது. அதில் இஸ்லாத்தின் ஒரு பிரிவாகிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் தலைமையகத்திலிருந்து வருகை தந்துள்ளார். அதாவது இலண்டனிலிருந்து வந்துள்ளார். பிறகு முதல் பள்ளிவாசல் நிலைபெறுவதைக் குறித்து அறிவிப்பு செய்துள்ளார். அது ஆரம்பத்தில் ஸ்போர்ட்ஸ் காம்ப்ளக்ஸ் ஆக இருந்தது. பிறகு இமாம் ஜமாஅத் அவர்கள் இந்த பள்ளிவாசலில் மத இன வேறுபாடின்றி அனைவரும் இதற்குள் வரலாம் என அறிவித்துள்ளார் என செய்தியினை வெளியிட்டுள்ளது.

சுருக்கம் என்னவென்றால் எந்தெந்த பத்திரிகையாளர்களிடம் நேர்காணல் கொடுக்கப்பட்டதோ அல்லது கருத்துகள் எட்ட வைக்கப்பட்டதோ அதில் இஸ்லாத்தின் அழகிய போதனை பற்றி கூறப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகை பற்றி பேசப்பட்டது. இஸ்லாத்தில் யுத்தங்களைப் பற்றிய கருத்து போன்றவற்றைப் பற்றி பேசப்பட்டது.

மேலும் ஜமாஅத் அஹ்மதிய்யா எவ்வாறு தப்லீக் பணியைச் செய்கிறது. முஸ்லிம் நாடுகளில் அமைதியின்மை மற்றும் அதற்கான தீர்வு குறித்து பேசப்பட்டது. உலகில் உண்மையான அமைதி எவ்வாறு நிலைநாட்டப்படும்? என்பதைக் குறித்தும் பேசப்பட்டது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு என்ன அந்தஸ்து உள்ளது? இதனைப் பற்றியும் பேசப்பட்டது. கிலாஃபத் மற்றும் ஜமாஅத்திற்கிடையில் உள்ள தொடர்பு என்ன? என்பதைப் பற்றியும் பேசப்பட்டது.

மிகப்பெரிய அளவில் ஜமாஅத்தின் அறிமுகம் இந்த விசயங்களின் மூலம் ஏற்பட்டது. இந்த அனைத்து பத்திரிகைகள், டி.வி. சேனல்கள் மற்றும் ரேடியோ போன்றவற்றை ஒன்றுசேர்த்தால் இதனைப் பார்க்கக்கூடிய, கேட்கக்கூடிய, படிக்கக்கூடிய மக்களின் எண்ணிக்கை அவர்களது கணிப்பின்படி மூன்றரை கோடி மக்கள் வரை தூதுச் செய்தி எட்டியுள்ளது.

எனவே அல்லாஹ் ஒவ்வொரு பகுதியிலும் இஸ்லாத்தின் அழகிய போதனை பற்றிய அறிமுகத்தினை ஏற்படுத்துகின்றான். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி உலகிற்கு தெரிய வருகிறது. இஸ்லாத்தின் உண்மையான அழகிய போதனை உலகின் முன்பு எடுத்து வைக்கப்படுகின்றது. இவை அனைத்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கூற்றாகிய இது நேர்வழியைப் பரப்புவது முழுமையாக்கப்படும் காலகட்டமாகும். இந்த மீடியா போன்றவைகள் நமது சக்திக்கு அப்பாற்பட்ட அளவில் கவரேஜ் செய்வது இது அல்லாஹ்வின் செயல்ரீதியிலான சாட்சியாகும். இவ்வாறு செய்வதென்பது நமக்கு சாத்தியமற்றதாகும். இந்த அளவு விரிவாக இந்த நான்கு நாட்டில் மட்டும் அல்ல. மாறாக இதன் மூலம் ஏனைய 46 நாடுகள் வரை (இதில் பாகிஸ்தானும்) அடங்கும். அங்கிருந்தும் நேர்காணல் வெளியானது தொடர்பான செய்தி வந்தது. இந்த 46 நாடுகளில் அஹ்மதிய்யத்தின், இஸ்லாத்தின் தூதுச் செய்தி எட்டியுள்ளது. எனவே அறிவு இருக்கும் என்றால் இந்த ஒரு விசயமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உண்மைக்குப் போதுமான சான்றாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த அடியான் وَأَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ ***இறைவனின் அருள்களை எடுத்துரைப்பீராக (93:12)*** என்ற கட்டளைக்கிணங்க இந்த விசயத்தை எடுத்துரைப்பதில் எவ்வித வெட்கமும் இல்லை. இறைவன் தனது அருளினாலேயே அந்த அனைத்து விசயங்களிலிருந்து இந்த அடியானுக்கு மிகப்பெரிய அளவு பங்கினைக் கொடுத்துள்ளான். இந்த அடியானை வெறுங்கையோடு அனுப்பவில்லை. அடையாளங்கள் ஏதுமின்றி அனுப்பவில்லை. மாறாக எல்லா அடையாளங்களையும் வழங்கியுள்ளான். அவை வெளிப்பட்டுக்

கொண்டிருக்கின்றன. இனிவரும் காலங்களிலும் வெளிப்படும். இறைவன் இறுதி அத்தாட்சியை முழுமைப்படுத்தாத இந்த அடையாளங்களை வெளிப்படுத்திக் கொண்டே செலவான்.

அல்லாஹ் நமக்கும் நமது பொறுப்புகளைப் புரிவதற்கும் அதனை நிறைவேற்றுவதற்கும் வாய்ப்பளிப்பானாக!

சில வருத்தத்திற்குரிய செய்திகளும் உள்ளன. தொழுகைகளுக்குப் பிறகு நான் மூன்று ஜனாஸா தொழுகைகளைத் தொழ வைப்பேன்.

இதில் முதல் ஜனாஸா நமது சஹீது சகோதரர் கண்ணியத்திற்குரிய பஷீர் அஹ்மது சாஹிப் கியானி உடையதாகும். இவர் கண்ணியத்திற்குரிய அப்துல் கஃபூர் சாஹிப் கியானி உடைய மகன் ஆவார். நவம்பர் 1ம் தேதி வராங்கி டவுண் கராச்சியில் இவரது சஹாதத் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இவர் ஜுமுஆவிற்காக தனது அண்டை வீட்டார் முஹம்மது அக்ரம் குறைஷி சாஹிப் உடைய 11 வயது மகனுடன் 1.00 மணி அளவில் வாரங்கி டவுண் பள்ளிவாசல், பைத்துல் ஹபீஸ் நோக்கி சென்று கொண்டிருந்தார். இவர் நடந்து சென்று கொண்டிருந்தார். இவரது வீடு பள்ளிவாசலிலிருந்து ஏறக்குறைய 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இவர் பள்ளிவாசலுக்கு அருகில் சென்று விட்டார். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள் பின்புறமாக இவர் மீது சுட்டனர். அதில் அவர் அதிகமாக காயமடைந்து விட்டார். ஒரு தோட்டா நெற்றிப் பொட்டில் பாய்ந்தது. மற்ற இரண்டு தோட்டாக்கள் நெஞ்சில் பாய்ந்தன. உடன் சென்ற பையனுக்கு கரண்டைக் காலில் குண்டு பாய்ந்து வெளியே வந்தது. உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஆனால் அங்கு சென்றதும் பஷீர் கியானி சாஹிப் சஹீதாகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

தாக்குதல் நடத்தியவர்களின் துப்பாக்கி சூட்டில் காலில் குண்டடிபட்ட முஹம்மது அஹ்மது வாஜிது தவிர பஜாரில் நின்று கொண்டிருந்த ஜமாஅத்தைச் சாராத இருவரும் காயமடைந்தார்கள். முஹம்மது அஹ்மது வாஜித் சிறுவன் ஆவான். அவனுக்கு மருத்துவம் அளிக்கப்பட்டு மருத்துவமனையிலிருந்து அனுப்பப்பட்டு விட்டான். தற்போது நல்ல நிலையில் உள்ளான். அல்லாஹ் அவனுக்கு முழுமையான நிவாரணத்தை அளிப்பானாக!

பஷீர் அஹ்மது கியானி சாஹிப் உடைய மூத்த மருமகனை ஸகூர் அஹ்மது கியானி சாஹிபை ஆகஸ்டு 21ம் தேதி சஹீதாக்கினார்கள். இவரது மகன் இஜாஸ் அஹ்மது கியானியை செப்டம்பர் 18ம் தேதி இதே பகுதியான ரங்கி டவுணில் எதிரிகள் சஹீதாக்கினர். இவரது குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவரது இரண்டு சிறிய தந்தைகள் கண்ணியத்திற்குரிய யூசுஃப் கியானி மற்றும் சயீத் கியானி சாஹிப் மூலமாக தொடங்கியது. 1936 -ல் இவர்கள் பைஅத் செய்தனர். நூற்களைப் படித்த பிறகு புதிய அஹ்மதிகளில் இணைந்தனர்.

பஷீர் கியானி சாஹிப் மெட்ரி படித்த பிறகு இராணுவத்தில் சிப்பாய் ஆக சேர்ந்தார். 1979 -ல் இவர் கராச்சிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அங்கிருந்தே அவர் பணி ஓய்வு பெற்றார். மர்ஹூம் உடைய வயது 68 ஆகும். மிகவும் சிறந்த நல்லொழுக்கம் கொண்டவர் ஆவார். உணர்வுமிக்க பண்பினைக் கொண்டவராவார். வாய்ப்புகள் கிடைக்கும் போதெல்லாம் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் தப்லீக் செய்வார். மிகவும் தைரியமிக்க வீரமான மனிதர் ஆவார். மருமகன் மற்றும் மகனுடைய சஹாதத்திற்குப் பிறகு பயப்படவில்லை. மாறாக தனது பிள்ளைகளுக்கு தைரியமூட்டி வந்தார். சஹாதத் நடைபெற்ற நாளில் தமது மகன் இஜாஸ் அஹ்மது கியானியிடம் நாம் தான் நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இங்கிருந்து செல்லக் கூடாது எனக் கூறினார்.

இலாக்கா காயித் எழுதுகிறார்கள்: இவரது மகன் இஜாஸ் அஹ்மது கியானியின் சஹாதத் சம்பவத்திற்குப் பிறகு ஏனைய உறவினர்களை வழி அனுப்புவதற்காக விமான நிலையம் சென்ற போது சஹீது இஜாஸ் கியானியின் தாயின் கவலையான நிலையைக் கண்டு வீல் சேர் வரவழைத்தேன். அப்போது அதனைப் பார்த்து பஷீர் கியானி சாஹிப் அவர்கள் தற்போது எனது ஒரு மகன் தான் சஹீதாகி இருக்கின்றான். இப்போதே உட்கார்ந்து விட வேண்டும் என நீங்கள் கருதுகின்றீர்களா? என்றார்.

மிகவும் ரோசம் மிகுந்த மனிதர் ஆவார். இவர் இராணுவத்தில் பணியாற்றிய போது சவூதி அரேபியா போஸ்டிங் ஆனது. அப்போது பாஸ்போர்ட்டில் அஹ்மதி என எழுதாதீர்கள் எனக் கூறினார்கள். அதற்கு நான் செல்லா விட்டாலும் பரவாயில்லை. இவ்வாறு ஒருபோதும் இந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்றார். சஹீது மர்ஹூமின் பிரிவால் வாடுபவர்களில் மனைவி ஃபாத்திமா பஷீர் கியானி சாஹிபா மற்றும் இரண்டு மகன்கள் இஜாஸ் கியானி சபான் கியானி மற்றும் 5 மகள்களை விட்டுச் சென்றுள்ளனர். ஒன்று தாஹிரா ஸகூர் கியானி இவர் சஹீது ஸகூர் கியானி சாஹிப் உடைய மனைவி ஆவார். நாயிதா தய்யிப், சாஹிதா பஷீர், ஸாஜிதா பஷீர் மற்றும் ஒசிகா

கன்வல் ஆவார்கள். அல்லாஹ் மர்ஹூமுடைய தர்ஜாவை உயர்த்துவானாக! இவர்கள் அனைவருக்கும் பொறுமையை வழங்குவானாக!

பஷீர் கியானி சாஹிபைப் பற்றி ஒரு உறவினர் எழுதியிருக்கிறார்: கராச்சியில் அவரது 2 உறவினர்கள் சஹீதாக்கப்பட்ட போது நீங்கள் கராச்சியை விட்டு சென்று விடுங்கள் என்றேன். அவர் வருத்தத்தில் அமர்ந்திருந்தார். கண்களில் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. உடனடியாக ஒரு மூச்சில் தனது குனிந்த முதுகை நேராக நிமிர்த்தியவாறு இது எவ்வாறு முடியும்? நாம் அஹ்மதிய்யத்தை பூமியின் எல்லை வரை பரப்ப வேண்டும். ஆனால் நீங்கள் கராச்சியினை விட்டு வாருங்கள் என கூறுகின்றீர்கள். தியாகங்கள் நமது தைரியத்தை உறுதிப்படுத்தக் கூடியதாகும். எதிரியால் நமது ஈமானை பலவீனமடையச் செய்ய முடியாது. அல்லாஹ் விரைவில் எதிரிகளைப் பிடிப்பதற்கான வழிவகை செய்வானாக!

இரண்டாவது ஜனாஸா இங்கு சிலர் தொழுது இருக்கலாம். அவர் இங்கு வசிப்பவர் ஆவார். இது நமத சகோதரர் அப்துல் ஸமீ உமர் சாஹிப் உடைய ஜனாஸாவாகும். இவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டது. பின்னர் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. ஆனால் அறுவை சிகிச்சை வெற்றி அடையச் செய்யவில்லை. சில நாட்களுக்குப் பிறகு 69 வயதில் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் முதல் கலீஃபத்துல் மஸீஹ் உடைய பேரன் ஆவார்கள். முப்தி முஹம்மது சாதிக் சாஹிப் உடைய மகள்வழிப் பேரன் ஆவார். யூ.கே. மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வைச் சார்ந்தவர்கள் இவரை அறிவார்கள். இவர் இங்கு தொண்டாற்றி வந்தார். இங்கு காயிது தஃலீம் ஆகவும் காயித் தர்பிய்யத் ஆகவும் செயல்பட்டு வந்தார். தூய்மை மற்றும் விசுவாசத்துடன் கடினமாக உழைத்து வந்தார்கள். துஆக்கள் செய்யக் கூடிய இரக்க குணம் கொண்ட கருணையுள்ளம் கொண்ட, இரத்த உறவை பேணக்கூடிய இறை நம்பிக்கை அதிகமுள்ள மனிதர் ஆவார். இவருக்கு கிலாஃபத்துடன் அன்பு மற்றும் விசுவாசத்திற்கான நல்லதொரு தொடர்பு இருந்தது. இவருக்கு ஏதாவது பணியிருந்தால் எனக்கு கண்டிப்பாக தெரிவிப்பார். மிகவும் அழகிய முறையில் திலாவத் செய்பவர் ஆவார். இவரது ஒரு சகோதரர் முனீர் உமர் சாஹிப் மே 28ம் தேதி 2010 –ல் சஹீதானார்கள். இவர் தனக்குப் பின்னர் ஒரு மனைவி, ஒரு மகள் மற்றும் 2 மகன்களை விட்டுச் சென்றுள்ளார். அல்லாஹ் இவரது தர்ஜாவை உயர்த்துவானாக!

மூன்றாவது ஜனாஸா முஸம்மில் இல்யாஸ் சாஹிப். இவர் ஜாமிஆ அஹ்மதிய்யா உடைய மாணவர் ஆவார். சட்சட்ஆ, ஹபிஸா பாதி மாவட்டத்தைச் சேர்ந்தவராவார். திடீரென்று செப்டம்பர் 9 ம் தேதி ஜாமிஆவிலேயே ஃபஜ்ர் நேரத்தில் இவருக்கு மரணம் ஏற்பட்டது. இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவருக்கு வயது 17 ஆகும். ஜாமிஆவில் தர்ஜா மும்மஜிதா உடைய மாணவர் ஆவார். மிகவும் ஆர்வத்துடன் ஜாமிஆவில் சேர்ந்தார். எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வின் விருப்பம் எதுவாக இருந்ததோ அதுவே நடைபெற்றது.

ஹாஸ்டலிலுள்ள சூப்பரின்டென்டென்ட் கூறுகின்றார்கள்: இவர் தொழுகையைப் பேணக்கூடிய தினமும் தொடர்ந்து திலாவத் செய்யக் கூடிய மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்களை மிகவும் ஆர்வத்துடன் படிக்கக்கூடியவர் ஆவார். எனது குத்பாக்களை மிகவும் கவனமாக அன்பாக கேட்டு வந்தார். இவரது தாய்வழிப் பாட்டனார் இவர் ஒருபோதும் தஹஜ்ஜுத் தொழுகையை விட்டதில்லை எனக் கூறுகின்றார். தலைமையகத்தைப் பாதுகாக்கும் பணி கொடுக்கப்படும் போதெல்லாம் பெரும்பாலும் சஹீது ஆவதற்கு ஆசைப்பட்டு வந்தார்.

இவரது பெற்றோர்கள் சிறந்த பொறுமையினை கடைபிடித்துள்ளனர். அவர்கள் அல்லாஹ்வின் விருப்பத்திலேயே நாங்கள் திருப்தி கொள்கிறோம் எனக் கூறினர். மேலும் அவன் எங்களது பிள்ளையின் தியாகத்தை இவ்வளவு விரைவாக ஏற்றுக் கொண்டதற்கு நன்றியுள்ளவர்கள் ஆவோம். அல்லாஹ் மர்ஹூமின் தர்ஜாவை உயர்த்துவானாக! இவரது பெற்றோர்களுக்கு பொறுமையினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **15.11.2013**

Translated by : Maulavi N. ZIAUL HAQ Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456